ந.க.எண்:11915/நி2/4/2019

**மருத்துவக்கல்வி இயக்குநர் அலுவலகம்,**
**கீழ்ப்பாக்கம், சென்னை-10.**
**நாள்:13.06.2019.**

பொருள் : நிர்வாகம் - திரு.S.மலர்கொடி க/பெ.(லேட்) திரு.K.செல்வக்குமார், தட்ச்சர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து - ஆணை வெளியிடப்பட்டது - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தங்கள் அலுவலக கடித ந.க.எண்:2297/நி1/1/2012, நாள்:13.02.2019.

2. அரசாணை (2ப) எண்:82, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்: 09.05.2019

*******

திரு.S.மலர்கொடி க/பெ.(லேட்) திரு.K.செல்வக்குமார், தட்ச்சர், அரசு கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை அவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணை இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தனியருக்கு உரிய முறையில் சார்பு செய்து பணிப்பதிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சென்னை, அரசு கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : மேலே கண்டவாறு.

ப.சரத்பாபு
அரசு துணை செயலாளர் /
துணை மருத்துவக்கல்வி இயக்குநர் (நிர்வாகம்)

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பபடுகிறது

P. Sudha 13/6/19
அலுவலக கண்காணிப்பாளர்.

13/6/19

பெறுநர் :

1. திரு.S.மலர்கொடி, தட்டச்சர் (உரிய வழியாக)

2. முதல்வர்,
அரசு கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை,
சென்னை-10.

3. மாநில கணக்காயர், சென்னை-18.

Ref. No: 2294/E1/1/2019

Govt. Kilpauk Medical College Hospital
Chennai - 10. Dt: 07. 2019.

To
Tmt. S. Malarkodi, Typist,
Govt. Kilpauk Medical College Hospital
Chennai - 10.

ADMINISTRATIVE OFFICER
Govt. Kilpauk Medical College Hospital
Chennai - 600 010

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.S.மலர்கொடி, (க/பெ.(லேட்) திரு.K.செல்வக்குமார்), தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை

அரசாணை (2ப) எண்: 82

நாள்: 09.05.2019.
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, சித்திரை – 26

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018
2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்.11915/நி2/4/2019, நாள்: 04.03.2019

-----

ஆணை :-

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பதிவுறு எழுத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.K.செல்வக்குமார், என்பவர் 27.11.2010ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 20.10.1970 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.10.2028 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.S.மலர்கொடி, என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 09.04.2012 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 19.01.1975 என்றும், திருமதி.S.மலர்கொடி என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி கீழ்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தட்டச்சராக 21.04.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 21.04.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திருமதி.S.மலர்கொடி தட்டச்சர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 21.04.2017 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறையின் இசைவினை முறையே அவற்றின் அ.சா.எண்.5694/க்யூ1/2019–1, நாள்: 11.04.2019 (ம) அ.சா.எண்.12622/ஜி2/2019, நாள் 03.05.2019–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை– 600 010.
திரு.S. மலர்கொடி, தட்டச்சர், (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை– 600 018.

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, சென்னை– 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (ஜி2) துறை, சென்னை– 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை– 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்